# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.90/2021. தேதி-01.04.2026

(P..W.1) . அசோக் டார்வின்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது அப்பா அவரது பெயரில் அவர் கொடுத்த பணத்திற்கு ஈடாக வாங்கப்பட்ட சொத்தாகும். மேற்படி ஆவணத்தில் எல்கை 2 வது நபர் வகை சொத்திற்கு மேற்கும் பாதைக்கு வடக்கும் குருசுமுத்து கிரையம் வாங்கும் சொத்திற்கும் 1 வது நபர் வகை தனது கிடப்பு சொத்திற்கு கிழக்கும் குருசுமுத்து சொத்திற்கு தெற்குமாகும் என்றால் சரிதான். ஆ.எண். 629, 2010 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். நான் சொல்லுவது போல் பி பட்டிகை சொத்து ஒரு வழிப்பாதையாக இருந்தால் எனது அப்பா ஒரு வழிபாதை அவகாசம் ஒரு கிரையம் வாங்க வேண்டுடிய அவசியம் இல்லை என்றால் 1983 ஆம் ஆண்டில் இருந்தே பி பட்டிகை சொத்தை வழிப்பாதையாக உபயோகித்து வருகிறோம், 1983 ஆம் ஆண்டு நான் பிறக்க வில்லை என்றால் சரிதான். 1983 ஆம் ஆண்டு பிறக்காமல் அங்கு வழிப்பாதை இருப்பாதாக கூறுவது பொய்யாகும் என்றால் சரியல்ல. முந்திரி தொழிற்சாலை இருக்கும் இடத்தின் பெயர் வடக்கடப்பு என்றால் சரியல்ல. நாகவிளை ஆகும். வாதிகளின் புதிய வீடு இருக்கும் பெயர் என்ன என்றால் கல்னாட்டிவிளை. எனது புதிய வீடு இருக்கம் இடம் கல்னாட்டிவிளை அல்ல வடக்கடப்பு என்றால் சரியல்ல. வழக்கு எ பட்டிகை சொத்து இருக்கு இடம் ஒருபிலாவிளை என்றால் ஒருபிலாவிளை என்பது வடக்கடப்பில் தான் உள்ளது.

வா.சா.ஆ.24. இந்த வழக்கிற்காக தயாரியக்கப்பட்ட ஆவணம் உண்மையில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தால் கையெழுத்து இடம் பெற்றிருக்காது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.22 ஆம் ஆவணம் 2 ஆம் பிரதிவாதின் சொத்து வழியாக பி பட்டிகை சொத்து வழியாக செல்வதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் பி பட்கை சொத்து சீமோன் உடையது. பி பட்டிகை சொத்து சீமோன் உடைய சொத்தின் வடக்கு பக்கத்தியில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.22 ஆவணத்தில் பி பட்டிகை சொத்து எனது வீட்டின் நடுவில் சென்று முடிவடைவது போல் காட்டப்பட்டிக்கிறது நீதிமன்ற ஆணையர் அவரது வரைபடத்தில் அவ்வாறு காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்து அனுமதி பெற வீடு கட்டுபவரே வரைந்து அனுமதிக்காக தாக்கல் செய்வார் என்றால் சரியல்ல. எனது அப்பா பி பட்டிகை சொத்தை வழி பாதையாக காண்பித்து அனுமதி பெற்றுள்ளார் என்றால் பி பட்டிகை சொத்தில் தான் குடிநீர் பைப் லைனும் செல்கிறது. நான் பஞ்சாயத்தின் குடிநீர் பைப் லைன் போடுவதற்கான கான்டிராக்ட் வேலை செய்து வருவதாலும் 2 ஆம் பிரதிவாதி சென்னையில் வசித்து வருவதாலும் இரவோடு இரவாக பி பட்டிகை சொத்தின் வழியாக குடிநீர் குழாய் பதித்துள்ளேன் என்றால் 2001 ஆம் எனக்கு வயது 15 அப்போதிலிருந்து இப்போது வரை பாலபல்லம் பேரூராட்சி கான்டிராக்ட் வேலைக்கு செல்ல வில்லை. பேரூராட்சின் வேலை ஆட்கள் தான் அதை செய்வார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் இருப்ப என்னுடைய வீட்டின் காம்பௌண்ட் சுவர் என்றால் சரிதான். அதில் சிமெண்டால் பூசப்பட்டது என்ன என்றால் எனது வீட்டில் வேலை நடந்த போது மீதம் இருந்த சிமெண்டை எடுத்து பூசப்பட்ட இடமாகும். மேற்படி சிமெண்ட் பூசப்பட்ட இடம் தான் எனது அப்பா

உபயோகித்து வந்த வழிப்பாதை என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் இருக்கும் மின் கம்பி வழியாகதான் எனது வீட்டிற்கு மின் இணைப்பு செல்கிறது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் புகைபடத்தில் இருக்கும் பூசப்பட்ட காம்பௌண்ட் சுவர் அதன் தரைமட்டத்தில் இருந்து எவ்வளவு இருக்கும் என்றால் 7 அடி உயரம் இருக்கும். என்னிடம் காண்பிக்கப்படும் புகைபத்தில் சிமெண்ட் பூசாமல் மின் கம்பியின் அருகில் இருக்கும் காம்பௌண்ட் சுவர் ஜோசப் என்பவரின் காம்பௌண்ட் சுவர் ஆகும். பூசப்பட்டிருக்கம் காம்பௌண்ட் சுவர் என்னுடையது ஆகும். எனது அப்பா எ பட்டிகை சொத்தின் தென்மேற்கு மூலை வழியாகதான் வழிப்பாதை அவகாசம் மற்றும் மின் இணைப்பு எடுத்து அனுபவித்து வந்தார் என்றால் பி பட்டிகை சொத்தைதான் வழிப்பாதையாக உபயோகித்து வந்தார்.

நான் 2ஆம் பிரதிவாதி மேல் குற்ற எண். 295/2022 என்ற முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கைக்காக இரணியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி குற்ற பத்திரிக்கையுடன் காவல் துறையினர் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் குற்றப்பத்திரிக்கையைப் பார்க்கவில்லை. அதில் எனது வீட்டின் பின் பகுதியில் வழிப்பாதை இருப்பதை காண்பித்துள்ளனர் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் சம்பவ இடத்தையும் சம்பவம் நடந்த முறையையும் நான் தான் போலீஸாருக்கு சொல்லிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதில் பார்வை மகஜர் சாட்சிகளாக உள்ள ஜனோ ரெனித் மற்றும் ஜெசுராஜ் ஆகிய இருவரையும் எனக்கு தெரியும் மேற்படி நபர்கள் தான் சம்ப இடத்தை போலீஸாருக்கு காட்டி கொடுத்தார் என்றால்

அதைப்பற்றி எனக்கு தெரியாது. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் வழக்கு எ பட்டிகை சொத்தின் தென்மேற்கு மூலையில் வழிபாதை இருப்பதை ஆய்வாளர் காட்டியுள்ளார் என்றால் குற்றவாளிகளை தப்பிக்க வைக்கவேண்டும் என்று அவ்வாறு காட்டியுள்ளார். இந்த வழக்கை தாக்கல் செய்த பின்பு என் மீது 5 புகார் கொடுக்கப்பட்டது என்றால் 3 தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. நான் தான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி நான் மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். எனது மனு அனுமதிக்கப்பட்டு இடம் பார்வையிட ஆணையர் வந்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்திருக்கும் வரைபடம் மற்றும் அறிக்கையின் மீது எனக்கு எந்த ஆட்சையைபனை இல்லை.

நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் காட்டியிருப்பது போல் எ பட்டிகை சொத்தின் தென்மேற்கு மூலையில் இருக்கும் மதில் சுவரில் தான் மீட்டர் பாக்ஸ் பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதில் சுவருக்கு வெளியே இருக்கும் மின்கம்பம் வழியாகதான் மின் இணைப்பு எனது வீட்டிற்கு வருகிறது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வரைபடத்தின் படி ஆலாஞ்சு முந்திரி தொழ்ற்சாலை ரோட்டிலிருந்து தொடங்கி எ பட்டிகை சொத்தின் காம்பௌண்ட் சுவரை தொட்டு இருக்கும் வழியாகதான் மின் இணைப்பு செல்கிறது என்றால் சரிதான். ஆணையர் அவரது வரைபடத்தில் மஞ்சள் நிறத்தில் காண்பித்திருக்கும் பகுதி தான் எனது அப்பா விலைக்கு வாங்கி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். புகைபடத்தில் இருக்கும் சிமெண்ட்டால் பூசப்பட்ட காம்பௌண்ட் சுவரைதான் ஆணையர் அவரது வரைபடத்தில் 1.6 மீட்டார் வீதி இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

மேற்படி வழிப்பாதை வழியாகதான் எனது அப்பா எ பட்டிகை சொத்திற்கு சென்ற வருவார் என்றால் சரியல்ல. பி பட்டிகை சொத்தின் வழியாகதான் வழி அவகாசம் உள்ளது. 2020 ஆம் வருடம் பிரதிவாதிகளின் சொத்தை குறைந்த விலைக்க கேட்டு அவர்கள் மறுத்ததால் அவர்களது சொத்தின் வழியாக வழிப்பாதை கேட்டும் முதலில் இருந்த வழிப்பதையை சிமெண்ட்டால் பூசிவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை கஷ்டப்படுத்த வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பி பட்டிகை சொத்து என்பது பிரதிவாதிகளின் சொத்து என்றால் சரியல்ல. சீமோனின் சொத்தைதான் பிரதிவாதிகன் அனுபவித்து வருகிறார் என்றாலும் உண்மையில் 12 சென்ட் சொத்தில் ஆணையர் அறிக்கையின் படி 11 சென்ட் கூட கிடப்பில் இல்லை என்றால் 4 லிங்சு வழிப்பதை இருப்பதால் 12 சென்ட் சொத்தைவிட குறைவாகதான் இருக்கும்.

எ பட்டிகை சொத்து எவ்வளவு காலமாக பூட்டி கிடக்கிறது என்றால் தினசரியாக உபயோகித்து வருகிறோம். எ பட்டிகை சொத்து முழுவதுமாக அடைக்கப்பட்டுள்ளது வழிப்பாதை எதுவும் இல்லாமல் இருப்பதாக எனது வழக்குரையில் கூறியிருப்பது தவறு என்றால் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி வரை பி பட்டிகை சொத்தை தான் வழிப்பாதையாக உபயோகித்து வந்தோம். நானோ எனது அம்மா அப்பாவோ வழக்கு பி பட்டிகை சொத்தை ஒரு போதும் வழிப்பாதையாக உபயோகித்தது இல்லை இவ்வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிமோன் வழிப்பாதை அவகாசம் தந்ததாக நான் கூறியிருப்பது தவறு உண்மையில் அவர் வழி அவகாசம் தரவேண்டும் என்றால்

அவரது சொத்தில் தான் தரவேண்டும் பிரான்சிஸ்ஸின் சொத்தில் வழி அவகாசம் தரமுடியாது என்றால் சரியல்ல. சீமோன் கொடுத்த உயில் ஆவணம் ஜான் போஸ்கோவிற்கு கொடுத்தது என்றால் சரிதான். சீமோன் வழிப்பாதை தரவேண்டும் என்றால் எனக்கு நேரடியாக எழுதி தந்திருக்க வேண்டும் அவர் எழுதி தரவில்லை என்றால் சரிதான். சீமோன் ஜான் போஸ்கோவிற்கு கொடுத்த உயில் ஆவணம் அசல் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் சார்பதிவாளர் நகல் தான் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் நான் சொல்லியுள்ள சங்கதிகல் அணைத்தும் இந்த வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட சங்கதி என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.